**கம்பஹா மாவட்டம் 26 கமநலசேவைக் குழுக்கள்- 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 கம்பஹா மாவட்டத்தின் 26 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 கம்பஹா மாவட்டத்தின் 26 கமநலசேவை குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளில் வெளியிடப்பட்டிருந்த 26 கணக்காய்வு அறிக்கைகளில் 01 குழுவின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளதுடன் 25 குழுக்களுக்காக முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்குக் காரணங்களாகியிருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அபிப்பிராயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல சேவைக் குழுக்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரிவு 09 இற்கு இணங்க ரூபா 2,059,663 தொகை பெறுமதியுடைய ஒரு வருடத்தில் முதிர்வடையக் கூடிய 04 நிலையான வைப்புகள் முதலீட்டுத் தொழிற்பாடுகள் என காட்டப்படுவதற்கு பதிலாக நிதித் தொழிற்பாடுகள் என காட்டப்பட்டிருந்தது. கணக்கீட்டு நியம இலக்கம் 09 இற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிதிக் கூற்றுத் தொகுதிக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதான காசுப் பாய்ச்சலை | ஏற்றுக் கொள்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்கண்டு வகைப்படுத்தாமல் கமநல வங்கிப் பிரிவின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அனைத்து வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஏக்கர் வரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 26 முதல் 86 வரையான பிரிவுகளுக்கு இணங்க 26 குழுக்கள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காததுடன் 3 குழுக்களின் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு செய்யக் கூடிய பெறுமதி பயன்படுத்தக் கூடிய ஆயுட்காலம் முழுவதும் பகிரப்படாமல் ஒழுங்குபாக முறைப்படி பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மேலும் 03 குழுக்களின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், சொத்தொன்றின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் அனைத்து கணக்காண்டுகளிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பெறுமானத்தேய்வு கழித்து முடிவடைந்த சொத்தின் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாமல் சூனியப் பெறுமதி ஒன்று நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். கமநல சேவை குழுக்கள் அமைந்துள்ள காணிகள், கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. சரியான பெறுமானத்தேய்வு விகிதாசாரம் அடுத்த ஆண்டில் பயன்படுத்துவதற்கு கருத்துரைக்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | கமநல வங்கிகள், கமநல சேவைக் குழுவொன்றின் அலகு ஒன்றாக காணப்படுவதனால் ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 26 குழுக்களினாலும் அவ்வாறு ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். கமநல சேவை திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த மாதிரிக்கு இணங்க கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கலஹிடியாவ கமநல சேவை குழுவினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த இருப்புகள் மற்றும் நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பாக அறுதியான மற்றும் போதியளவு தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பதில் அளித்திருக்கவில்லை. | ஒழுங்கீனங்கள் தொடர்பாக போதியளவு தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 423,863 தொகை பெறுமதியான கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு செய்தல் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் கீழ் பதிவதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவுகள் என நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஆண்டு கணக்கு அறிக்கையின் மூலம் சரி செய்வதற்கு குறித்துக் கொண்டேன். | ஆண்டிற்கான மூலதனச் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் அதன் படி பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1990 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய 13 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 864,251 தொகைக்கான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டு இறதியளவிலும் தீர்த்திருக்காததுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அட்டுறு செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், நிலுவை கணக்காய்வுக் கட்டணம் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | இடையிடையே அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்த உரத்தின் விலை குறைத்தல் மற்றும் இலவசமாக வழங்கியதன் காரணமாக 07 கமநல சேவைக் குழுக்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 2,131,162 தொகை உரக் கம்பனிகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையொன்றென காட்டப்பட்டிருந்தமையால் அந்தத் தொகையினால் நிதி நிலைமைக் கூற்றில் போலிச் சொத்தொன்று ஏற்பட்டிருந்தது. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு கடிதங்கள் அனுப்பட்ட போதிலும் அவை கிடைக்கப் பெறாமைமையால் முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொண்டு கணக்குகளில் இருந்து அகற்றப்படும். | நட்டங்கள் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 03 கமநல சேவைக் குழுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 5,387,696 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் அந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிலையான வைப்புக்களின் வருட இறுதியில் உள்ள மீதிக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொண்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கலஹிடியாவ கமநல சேவைக் குழுவில் 03 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் செலுத்த வேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 315,344 தொகை அவதானிக்கப்பட்டதுடன், அந்த மீதிகள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் காணப்படாமையால் மற்றும் பல வருட காலம் கழிந்திருந்த போதிலும் குறிப்பிட்ட தரப்பினர் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கு முன்வந்திருக்காத போதிலும் அந்த மீதிகள் தொடர்பாக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் அழைக்கப்பட்டு முறையான அங்கீகாரத்தின் கீழ் செயற்பட்டு தீர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | கலஹிடியாவ கமநல சேவைக் குழுவின் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 132,458 தொகைக்கான பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த இருப்புக்கள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொண்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலஹிடியாவ கமநல சேவை குழுவின் காசுப்பாய்ச்சல் கூற்றின் படி காட்டப்பட்டிருந்த மானிய உரம் (எம்ஓபீ) பணம் பெறுவனவு | பதில் அளிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை இணக்கஞ் செய்து சரியான மீதி நிதிக் கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3,049,671 தொகை ஆகக் காணப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 2,439,651 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 610,020 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | | உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கலஹிடியாவ கமநல சேவை பரீட்சை மீதியில் 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆரம்ப வரவு மற்றும் செலவு மீதிகள் இடையே ரூபா 500,943 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

### 1.3.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறைவேற்றுச் செயலாளரின் அங்கீகாரமின்றி 04 கமநல சேவைக் குழுக்களில் 60 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் மூலம் ரூபா 1,496,300 இற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு செயற்படுவேன். | நிறைவேற்றுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ரூபா 100,000 இனை விட மிகையான கொடுப்பனவு தொடர்பாக கமநல சேவை உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் இன்றி 06 கமநல சேவைக் குழுக்களின் 16 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 4,283,419 தொகைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு செயற்படுவேன். | கமநல சேவை உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை குழுக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 120,626 இற்கான நடைமுறை சொத்துக்கள் தொடர்பாக மற்றும் கூட்டுப் பெறுமதி ரூபா 234,681 இற்கான நடைமுறை பொறுப்புக்கள் தொடர்பாக கோப்புக்கள், சேமிப்பு பாஸ் புத்தகங்கள், மீதி உறுதிப்படுத்தும் | ஏற்றுக் கொள்கின்றேன். | எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடிதங்கள் மற்றும் வாடகை உடன்படிக்கைகள் போன்ற எழுத்துமூல சான்றுகள் காணப்படாத காரணத்தினால் அந்த கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 04 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,897,242 தொகைக்கான நிலையான வைப்பு தொடர்பாக நிலையான வைப்புப் பதிவேடு, முதிர்வடையும் அறிவித்தல் போன்ற எழுத்துமூல சான்றுகள் காணப்படாத காரணத்தினால் அந்த கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். அடுத்த ஆண்டு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கின்றேன். | எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கலஹிடியாவ கமநல சேவைக் குழுவின் கொடுக்கல் வாங்கல்கள் முழுமையாக மற்றும் முறைப்பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பொதுப் பேரேடொன்று அல்லது பொது நாட்குறிப்பு பதிவேடொன்று குழுவில் காணப்படாததுடன் முழுமையற்ற பொதுப் பேரேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | முழுமையான மற்றும் முறையான கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்ட குழுவின் பொதுப் பேரேடு மற்றும் பொது நாட்குறிப்பு பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கலஹிடியாவ கமநல சேவை குழுவின் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு அலுவல்களுக்காக மானிய உரப் பெறுவனவு மற்றும் வினியோகம் தொடர்பான இருப்புப் பதிவேடு நாளாந்தப் பெறுவனவு பதிவேடு, பணப் பெறுவனவு பற்றுச் சீட்டுக்கள், நாளாந்த விற்பனைகள் பதிவேடு, வங்கி கூற்றுக்கள், வங்கி இணக்கக் கூற்றுக்கள், மானிய உர இன்வொயிஸ் கோப்புக்கள், வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மானிய உரம் தொடர்பான ரூபா 11,351,779 இற்கான வரவு கொடுப்பனவுகள் | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் உரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

மற்றும் ரூபா 1,272,416 இற்கான செலவுக் கொடுப்பனவுகள் மற்றும் மானிய உரம் எம்லுபீ ரூபா 2,439,651 தொகை தொடர்பாக கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | 15 | படல்கம மற்றும் பல்லெவெல கமநல சேவைக் குழுக்களில் காணி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 346,697 தொகைக்கான காணி உரிமைப் பங்கு தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | 52(1) | அனைத்து போகங்களுக்கு முன்னரும் கமநல சேவைக் குழுக்களுக்காக விவசாய நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 04 கமநல சேவை குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | 07 குழுக்கள் தொடர்பான நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 133,134 | 19 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக அந்த குழுக்களின் உள்ளக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 185 | கலஹிடியாவ கமநல சேவை குழுவில் பணம் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர் கிடைக்கும் அனைத்துப் பணமும் காசேட்டில் மற்றும் அதற்குரிய ஏனைய பதிவேடுகளில் உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் வரவு பதிவிற்கு உரிய செலவு பதிவுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக்கவில்லை | -மேற்படி- |
| (iv) | நிதிப் பிரமாணம் 395 | கலஹிடியாவ கமநல சேவைக் குழுவின் இரண்டு நடைமுறைக் கணக்குகளுக்காக 2023 ஜூலை முதல் திசெம்பர் மாதம் வரை வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 880,891(1) | 15 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று தயாரித்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். | -மேற்படி- |
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜூன் 25 ஆந் திகதிய 08/2020 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | 26 கமநல சேவைக் குழுக்களிலும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், நிலைய எழுதுனர் மற்றும் வி.ஆ.உ.உ.(வங்கி) உத்தியோகத்தர்களிடம் முறையே ரூபா 15,000, ரூபா 5,000 மற்றும் ரூபா 2,500 வீதம் பிணை வைப்பு பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | பிணை வைப்புக்காக உதவி ஆணையாளர் - கம்பஹா இற்கு எழுத்துமூலம் இணக்கப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும் |
| (ii) | 2016 பெப்ரவரி 09 திகதிய 03/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | அதிகார பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு வருடத்தில் | ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஜனவரி மாதம் முதல் படிவத்தின் மூலம் பரிசோதனை | -மேற்படி- |

| | |
|---|---|
| குறைந்த அளவு 4 தடவைகள் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களினாலும், ஒரு வருடத்திற்கு குறைந்த அளவு ஒரு தடவை நிறைவேற்று உத்தியோகத்தர்களினாலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வு மாதிரியினை அடிப்படையாக கொண்டு பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 19 குழுக்களின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 582 விவசாய அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாக எதுவித பரிசோதனையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 21 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 13,541,017 இற்கான மிகையொன்றும் மற்றும் 05 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 2,826,714 இற்கான பற்றாக்குறையொன்றும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 11,487,637 தொகை மற்றும் ரூபா 487,984 தொகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் படி 26 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,100,272 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,148,416 தொகையாக இருந்தது.

### 2.2 நிதி விளைவுகளின் பகுப்பாய்வு

(அ) 09 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 7,851,885 இற்கான மிகையொன்றும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப அந்த 09 குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,589,344 தொகை காணப்பட்டது. அதன் படி அந்த 09 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 4,262,541 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தல், நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தல், விற்பனை நிலைய வருமானம் அதிகரித்தல் என்பன பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) அதேபோல் 04 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,917,916 இற்கான மிகையொன்றும் காணப்பட்ட போதிலும், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டில் அந்த 04 குழுக்களின் பற்றாக்குறையின் கூட்டுப்பெறுமதி ரூபா 487,984 தொகை காணப்பட்டது. அதன்படி அந்த 04 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 3,405,900 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தல், உர வருமானம்

அதிகரித்தல், திருத்தவேலை செலவுகள் குறைவடைதல், கட்டண வருமானம் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

(இ) 05 குழுக்களின் மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,826,714 இற்கான பற்றாக்குறையொன்று காட்டியதுடன் அதற்கு நேர்மாறாக அந்த 05 குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,295,130 தொகையாக இருந்தது. அதன் படி அந்த 05 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 5,121,844 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு விற்பனை வருமானம் குறைவடைதல், பாதுகாப்பு வேலிகள் நிர்மாணிக்கும் செலவுகள் அதிகரித்தல், காகிதாகிகள் செலவுகள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

(ஈ) 08 குழுக்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,771,216 இற்கான மிகையொன்று காட்டியதுடன், அதற்கு நேரொப்ப அந்த 08 குழுக்களின் நிதிவிளைவுகளின் இலாபங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 5,603,163 தொகை காணப்பட்டதுடன், அதன்படி அந்த 8 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 2,831,947 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு விற்பனை வருமானம் குறைவடைதல், கணினி மென்பொருள் கொள்வனவு செய்தல் உட்பட செலவுகள் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவிலும் கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவை நிலையங்கள் அமைந்துள்ள சுமார் 23 ஏக்கர் காணி குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து குழுக்களுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். திணைக்களத்தின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கின்றேன். | காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 26 கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த மொத்த வயற் காணிகளின் எண்ணிக்கை 58,573 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் நெற்பயிர் செய்யக் கூடிய வயற்காணிகளின் எண்ணிக்கை 36,557 ஏக்கர்களாக காணப்பட்டது. 2023/24 பெரும்போகத்தில் நெற்பயிர் செய்யப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 24,815 ஏக்கர்களாக காணப்பட்டது. அதன்படி பெரும்போகத்தில் பயிர்செய்யப்படாத நெற் காணியின் எண்ணிக்கை 11,742 ஏக்கர்களாக காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் தரிசு வயல்களின் எண்ணிக்கைகளை குறைப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | பயிர் செய்யப்படாத வயற்காணிகளை பயிர்செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | பல வருட காலமாக காணப்படுகின்ற 07 கமநல சேவைக் குழுக்களின் பெற வேண்டிய மீதிகளின் | ஏற்றுக்கொள்கின்றேன். | மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 2,601,559 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஈ) | கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் 2013 மார்ச் 08 திகதிய 04/2013 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் கமநல சேவை குழுக்களின் வருமான நிலைமையை முன்னேற்றுவது தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 குழுக்களினால் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | குழுக்களின் வருமான நிலைமையை முன்னேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் மாதம் 16 திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 04 இற்கு இணங்க விரலடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் சரியான செயற்பாடுகள், நிலைத்திருத்தல், உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கு இயலுமை மற்றும் குறைந்த செலவில் பராமரிப்பதற்கு இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தாத காரணத்தினால் கமநல சேவைக் குழுக்களில் பொருத்தப்பட்டிருந்த விரலடையாள இயந்திரங்கள் தொடர்ச்சியாக செயலிழக்கும் நிலைமை காணப்பட்டது. 10 கமநல சேவைக் குழுக்களினால் வருடாந்த சேவைக் கட்டணமாக ரூபா 97,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் அளவில் இயந்திரத்தில் விரலடையாளம் இடப்படுகின்ற போதிலும் அதில் காணப்படும் மென்பொருளின் வழுவொன்று காரணமாக அறிக்கைள் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தினால் விரலடையாள இயந்திரம் பொருத்தப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். விரலடையாள இயந்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட கம்பனி மற்றும் மாவட்ட அலுவலகத்திற்கு அறிவுருத்தப்பட்டது. | விரலடையாள இயந்திரத்தை செயற்படு நிலையில் பேணிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு பண்டங்கள் | ஏற்றுக்கொள்கின்றேன். | பணத்தை திருப்பி பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கும் போது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட உச்சமட்ட பண்டங்களின் பெறுமதி மற்றும் பணம் தீர்க்கப்பட வேண்டிக காலப் பகுதியை அறுதியாக தீர்மானித்திருக்காத காரணத்தினால் 04 கமநல சேவை குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 458,341 இற்கான தொகையொன்று நீண்ட காலம் முதல் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது. | | வேண்டும். |
| (எ) | 2011 பெப்ரவரி 01 திகதிய கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2011 இற்கு இணங்க பயன்படுத்தப்பட்ட அடியிதழ் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அடியிதழ் புத்தகங்கள் மீண்டும் வழங்கப்பட வேண்டியது ஆரம்பத்தில் வழங்கப்பட்ட புத்தகங்களை திருப்ப ஒப்படைத்த பின்னரே ஆகும். எனினம் 05 கமநல சேவைக் குழுக்களினால் ஒரு பற்றுக்சீட்டு புத்தகம் திருப்ப ஒப்படைக்காமல் மேலும் ஒரு பற்றுச்சீட்டு புத்தகம் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். அடியிதழ் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்துகின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஏ) | 26 கமநல சேவைக் குழுக்களின் அதிகாரப் பிரதேசத்தில் 943 விவசாய அமைப்புக்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 119 விவசாய அமைப்புக்கள் செயற்படாத மட்டத்தில் காணப்பட்டது. 1338 பெண் விவசாய அமைப்புக்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 345 உம் செயற்படாத மட்டத்தில் காணப்பட்டது. இந்த விவசாய அமைப்புக்களை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | செயற்படாத விவசாய அமைப்புக்களை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்காக 02 குழுக்களுக்கு கிடைத்திருந்த 63 விவசாய முறைப்பாடுகளில் 13 தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விவசாய முறைப்பாடுகளை கூடிய விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | ஜாஎல கமநல சேவைக் குழுவில் பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட விற்பனை நிலையமொன்று காணப்பட்டதுடன், கட்டிடத்தின் அலுவல்களை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | விற்பனை நிலையத்தை விரைவாக நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | 03 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான 04 டிரக்டர் வண்டிகள் முறையே மாதாந்த வாடகை ரூபா 150, ரூபா 200, ரூபா 1,500 மற்றும் போகம் ஒன்றிற்கு ரூபா 750 வீதம் மிகவும் குறைந்த தொகையொன்றுக்கு விவசாய அமைப்புகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 27,700 தொகை மாத்திரம் ஆகும். | குழுவின் தீர்மானத்தின் படி பழைய உடன்படிக்கையை இரத்துச் செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கட்டணங்களை திருத்தி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | பமுனுகம கமநல சேவைக் குழுவில் விவசாய காணிகள் அல்ல என சான்றிதழ்கள் வழங்கியதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 2,319,114 தொகை கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், கடந்த வருடத்திற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 231,752 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட பணத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | பெம்முல்ல கமநல சேவைக் குழுவின் 2021/22 பெறும் போகத்திற்காக நீரியல் வள வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தினால் குழுவிற்கு வழங்கியிருந்த 2022 ஜூலை 01 திகதி காலவதியாகிய திரவ உரம் 913 லீற்றர்கள் அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் எடுத்திருக்கவில்லை. | காலவதியாகிய உர இருப்பினை அப்புறப்படுத்துவதற்கு அங்கீகாரம் வினவப்பட்டுள்ளது. | காலவதியாகிய உரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 நிதியங்களின் குறைபயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 குழுக்கள் தொடர்பாக 2021/22 | இணங்குகின்றேன். ஆலோசனை கிடைக்கப்பெற்ற பின்னர் பணம் | குறிப்பிட்ட சேதனைப் பசளை உற்பத்தி |

| | | | |
|---|---|---|---|
| | பெரும் போகத்தில் சேதன உர உற்பத்திச் செயற்திட்டமொன்றிற்காக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,300,000 தொகைக்கான ஏற்பாடுகளில் ரூபா 638,099 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட விடயத்திற்கு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | திருப்பியனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாபொதல, படல்கம மற்றும் ஆண்டியம்பலம கமநல சேவைக் குழுக்களின் நடைமுறைக் கணக்குகளில் காணப்படுகின்ற முறையே ரூபா 2,432,937 தொகை, ரூபா 3,196,931 தொகை, ரூபா 2,401,140 தொகைக்கான வருட இறுதியில் காணப்படும் நடைமுறைக் கணக்கு மீதி கூடிய வட்டி வழங்கும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்கொன்றில் காணப்படும் மேலதிக பணம் முறையான அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவங்கொட கமநல சேவைக் குழுவில் பமுனுகம கமநல சேவைக் குழுவின் மற்றும் மரதகஹமுல கமநல சேவைக் குழுவின் விற்பனைக் குடில்களை பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மரதகஹமுல கமநல சேவைக் குழுவின் கைடிரக்டர் மற்றும் பியகம கமநல சேவைக் குழுவின் நெல் வெட்டும் இயந்திரம் பல வருட காலம் முதல் விளைவற்று காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துவதற்கு மற்றும் இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 26 கமநல சேவைக் குழுக்களுக்குரிய 739 விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் பிரிவுகளில் காணப்பட்டதுடன், | வெற்றிடமாகும் வி.ஆ.உ.உ. பிரிவுகளுக்காக புதிய உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படாமையால் அந்தப் | பிரிவுகளில் வசிக்கும் விவசாயிகளுக்கான சேவையை உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட பிரிவுகளுக்காக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 528 ஆக காணப்பட்டமையால், 211 பிரிவுகளில் பதில் கடமை நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. | பிரிவுகளுக்காக பதில் கடமை உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 03 மாதங்கள் முடிவடைய முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கலஹிடியாவ கமநல சேவைக் குழுவினால் நிதிக்கூற்றுக்கள் 90 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2024 ஜுலை 01 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 23 கமநல குழுக்களுக்கு சொந்தமான 23 கமநல வங்கி தொடர்பாக காலங்கடந்த கடன்களை அறவீடு செய்வதற்காக நியாய மன்றிற்கு சமர்ப்பித்தல், நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கியினால் வழங்கியிருந்த கடனில் காலங் கடந்தவைகளில் கூட்டுத்தொகை ரூபா 20,129,703 தொகை கடன்தொகையொன்று அறவிடப்படாமல் காணப்பட்டது. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2022 ஏப்ல் 27 திகதிய 7/12/5/4 இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தின் 04 பந்திக்கு இணங்க பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களில் காணப்படும் நிதியங்களில் ஒரு பகுதி கமநல | அடுத்த ஆண்டில் வைப்புக்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கமநல சேவைக் குழுக்களின் விவசாய அமைப்புக்களின் வைப்புக்களை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியில் வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும், 06 குழுக்கள் தொடர்பாக மொத்த விவசாய அமைப்புக்களான 213 இல் 06 கமநல வங்கிகளில் வைப்புக்கள் பேணிச் செல்லப்பட்டுள்ளது 71 விவசாய அமைப்புக்களினால் மாத்திரமே. கமநல சேவை குழுக்களில் விவசாய அமைப்புக்களின் வைப்புக்களை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | பெம்முல்ல கமநல வங்கியில் பங்குரிமை அங்கத்துவப் பேரேடு மற்றும் வைப்புப் பேரேடு பல வருட காலமாக நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன், பங்கு உரிமையாளர்களில் சிலர் இறந்திருந்த போதிலும், அவர்கள் யார் என இனங்காணல் அல்லது சந்ததியினருக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. | தற்போது இந்தப் பேரேடு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | கமநல வங்கியின் பங்கு உரிமை அங்கத்துவப் பேரேடு மற்றும் வைப்புப் பேரேடு தாமதமின்றி நாளதுவரை ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வல்பிட கமநல சேவைக் குழுவின் கமநல வங்கியில் காணப்படும் 06 வகையான வைப்புக்களில் 500 பங்கு உரிமையாளர் கணக்குகள், 500 சாதாரண சேமிப்புக் கணக்குகள் மற்றும் 50 சிறுவர் சேமிப்புக் கணக்குகளாக 1050 கணக்குகள் செயற்படாத கணக்குகளாக காணப்பட்டன. | சில கணக்குகளை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கான பணம் கிடைத்து வருகின்றது. | கணக்குகளை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |